# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S. No. 29/2020

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | ராமகிருஷ்ணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.03.2024.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன். 20.09.2002 தேதியிட்ட 1933/2002 எண் கொண்ட கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1, 01.02.2007 தேதியிட்ட 287/2007 எண் கொண்ட கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.2, 03.07.1909 தேதியிட்ட 1358/1909 எண் கொண்ட கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.3, 27.09.1991 தேதியிட்ட 1691/1991 எண் கொண்ட நன்கொடை ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.4, 06.06.1960 தேதியிட்ட 2615/1960 எண் கொண்ட கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.5, 26.11.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்மற்றும் அஞ்சலக ரசீது வா.சா.ஆ.6, அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.7, 05.12.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்மற்றும் அஞ்சலக ரசீது வா.சா.ஆ.8,அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.9, கேவியட் மனு வா.சா.ஆ.10, புகைப்படம் (எண்ணம்-3) வா.சா.ஆ.11, நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1, நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2, சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.3. **(வா.சா.ஆ.11 புகைப்படங்களுடன் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு**

**65 பி-ன் படி சான்று இணைக்கப்படவில்லை என்பதால் இந்த ஆவணம் குறியீடு செய்ய முடியாது என பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்ததால் இந்த ஆவணம் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. இந்த ஆட்சேபணை தீர்ப்பு பகரும் போது முடிவு செய்யப்படும்)**

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

ஒம்/-கே.பாஸ்கர்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி